Inclusion of "Mukkur" Community in Kanyakumari District in the list of Scheduled Castes.

*175. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government received any representation from the Mukkur Community in Kanyakumari District to include them in the Scheduled Caste list; and

(b) if so, the action taken by the Government thereon?

குமரி மாவட்ட "முக்கூர்" இனத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

(அ) குமரி மாவட்டத்தில் வாழும் "முக்கூர்" இனத்தை, தாழ்த் தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அந்தக் கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

Grants to the Association of Trained Social Workers, Madras.

*176. Q. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Association of Trained Social Workers, Madras, has been given grants by the State during the years 1970–71 and 1971–72; and

(b) if so, the details thereof?

சென்னை, பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர் சங்கத்திற்கு மானியம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர் சங்கத்திற்கு அரசு 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் மானியம் வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?